இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 142 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 16 – செவ்வாய்க்கிழமை 31 டிசம்பர் 2024 – சென்னை 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 142 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 16 - Tuesday 31 December 2024 - Chennai 20 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2024) கன்னியாகுமரியில், முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில், 37 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், திருமதி துர்கா ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர். அழகுமீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முக்கடல் சூழும் குமரி முனையில் ‘அய்யன் திருவள்ளுவர் சிலை’ வெள்ளி விழா! ரூ.37 கோடி மதிப்பில்

# அய்யன் திருவள்ளுவர் சிலை - ‘கண்ணாடி இழைப் பாலம்’!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, டிச. 31 –**

**முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவையொட்டி ரூ.37 கோடி செலவில் அய்யன் திருவள்ளுவர் சிலையை விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்து, அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையில் அமைக்கப்பட்டுள்ள சீரொளிக் (லேசர்) காட்சியினைத் தொடங்கி வைத்து, திருக்குறள் நெறி பரப்பும் 22 தகைமையாளர்களுக்குச் சிறப்புப் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்கள்.**

**அதன் விவரம் வருமாறு:-**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30-12-2024) கன்னியாகுமரியில், முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில், 37 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்தார்.

மேலும், திருக்குறள் நெறி பரப்பும் 22 தகைமையாளர்களுக்குச் சிறப்புப் பரிசுத் தொகையாக தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

### அறிவுத் திருவிளக்கு!

‘திருக்குறள்’ எனும் அறிவுத் திருவிளக்கை, திக்கெட்டும் பரப்புகின்ற பணியை தன்னுடைய ஒப்பற்ற கடமையாகக் கருதிச் செயல்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘குறளோவியம்’ தீட்டினார். குறளுக்கு விளக்கவுரை தந்தார், சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்தார், அரசு அலுவலகங்களிலும், பேருந்துகளிலும் குறளை எழுதவைத்து, குறளை எளிய மக்களுக்கு கொண்டு சேர்த்தார்.

கடல் அலைகள் தாலாட்டும் குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவருக்கு 2000ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாள் 133 அடியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிலை அமைத்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2024) கன்னியாகுமரியில், முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில், 37 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்து, விவேகானந்தர் பாறைக்கு இப்பாலத்தின் வழியாக நடந்து சென்று பார்வையிட்டார். இவ்விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், திருமதி துர்கா ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா காண்பதையொட்டி வரும் டிசம்பர் 30 ஆம் தேதி முதல் ஜனவரி 1ஆம் தேதி வரை தமிழ்நாடு அரசின் சார்பில் பெருவிழா கொண் டாடப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.11.2024 அன்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசின் சார்பில் முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா 30.12.2024 முதல் 1.1.2025 வரை மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இவ்விழாவில், இன்றையதினம் (30.12.2024) அய்யன் திருவள்ளுவர் சிலையை விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலம் திறப்பு விழா, திருக்குறள் நெறி பரப்பும் 22 தகைமையாளர்களுக்குச் சிறப்புப் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்குதல், சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் தலைமையில் “திருக்குறளால் அதிக நன்மை தனிமனிதருக்கே - சமுதாயத்திற்கே“ எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் ஆகியவை நடைபெற்றது.

நாளை (31.12.2024) அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை வெள்ளிவிழாச் சிறப்பு மலர் வெளியீடு, திருக்குறள் சார்ந்த போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியர்க்குப் பரிசுகள் வழங்குதல், பியானோ இசைக் கலைஞர் செல்வன் லிடியன் நாதஸ்வரம் அவர்களின் திருக்குறள் இசை நிகழ்ச்சி, அய்யன் திருவள்ளுவரின் பெருமைகளை எடுத்துரைக்கும் தமிழறிஞர்களின் கருத்தரங்கம் ஆகிய நிகழ்ச்சி களும், 1.1.2025 அன்று திருக்குறள் ஓவியக் கண்காட்சி திறப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

### திருவள்ளுவர் திருவுருவச் சிலை வெள்ளிவிழா நிகழ்ச்சிகள்

அதன்படி, அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை வெள்ளிவிழாவையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் படகு மூலம் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள இடத்திற்கு சென்று, அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள “பேரறிவுச் சிலை” (Statue of Wisdom) அலங்கார வளைவினை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, அய்யன் திருவள்ளுவர் சிலையை விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்து, திருவள்ளுவர் சிலையிலிருந்து விவேகானந்தர் பாறைக்கு இப்பாலத்தின் வழியாக நடந்து சென்று பார்வையிட்டார்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்